2019 ஜூலை 10]

(இ) மூன்று புதிய சட்டக் கல்லூரிகள் தோற்றுவித்தல், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரிகளில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் தொடர்பான சட்டம் மற்றும் நீதிமன்றங்கள் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் சட்டக் கல்வி பயில்வதற்காக விண்ணப்பிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது. பொருளாதாரம் மற்றும் சமூகத்தில் பின்தங்கிய குடும்பங்களைச் சார்ந்த மாணவர்களுக்குக் குறைந்த செலவில் சட்டக் கல்வியினை வழங்கிட புதிதாக 3 அரசு சட்டக் கல்லூரிகள் துவங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக தலா 3 கோடியே 17 இலட்சத்து 50 ரூபாய் ஆயிரம் வீதம், மொத்தம் 9 கோடியே 52 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில், 2019–2020 ஆம் கல்வியாண்டு முதல் தொடங்கப்படும். உடனடியாக, ஆரம்பக் கட்டப் பணிகளை மேற்கொள்வதற்காக ஒவ்வொரு கல்லூரிக்கும் ஒரு தனி அலுவலர் நியமிக்கப்படுவார்.*

நண்பகல் 12–00

2. கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரிகளில் மாணவர்களுக்குப் போதுமான உட்கட்டமைப்பு வசதிகளுடன் 7 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் கூடுதல் வகுப்பறைகள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஈ) சேலத்தில் துணை பதிவுத் துறை அலுவலகம் கட்டுதல், திருச்சியில் ஒருங்கிணைந்த வணிக வரித் துறை அலுவலக வளாகம் கட்டுதல் உள்ளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

1. சேலத்தில் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் துணை பதிவுத் துறை அலுவலகம் மற்றும் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள 24 சார்–பதிவாளர் அலுவலகங்களுக்கு 24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி][2019 ஜூலை 10

2. மேலும், நடப்பாண்டில் திருச்சிராப்பள்ளியில் வணிக வரி இணை ஆணையர் அலுவலகத்தை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வணிக வரித் துறை அலுவலக வளாகம் 23.38 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. இணையத்தின் மூலமாக பதிவுத் துறை ஆவணங்களைப் பதிவு செய்ய ஸ்டார் 2.0 மென்பொருள் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது. ஸ்டார் 2.0 மென்பொருள்மூலம் விரைவான மற்றும் வெளிப்படையான சேவை வழங்கப்படுவதால், பொது மக்களின் ஏகோபித்த வரவேற்பினைப் பெற்றுள்ளது. இதன் சேவைகளை மேலும் செம்மைப்படுத்த பழைய கணினிகளை மாற்றி, புதிய கணினி மற்றும் உபகரணங்கள் 21.63 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வாங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சட்டம் மற்றும் நீதிமன்றங்கள் துறை, வணிக வரி மற்றும் பதிவுத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் அல்லும் பகலும் அயராது உழைத்து, மக்கள் நலப் பணிகள் ஆற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், ஊரகப் பகுதிகளில் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும்வகையில், 5,000 கி.மீ. நீளமுள்ள ஊரகச் சாலைகள் மேம்பாடு மற்றும் கஜா புயலினால் மிகவும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் சாலைகள் மற்றும் பாலங்கள் சீரமைப்பு, பழுதடைந்த கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் தார்ச் சாலைகளாக மேம்படுத்துதல், தனிநபர் உறிஞ்சுக் குழிகள், ஆழ்துளைக் கிணறு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, கழிவு நீர்த்தேக்கத் தொட்டி, நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்த 10,000 தடுப்பணைகள், தேசிய ஊரக பொருளாதார*